உ

நூதன பெரிய

பலபேர்பாடிய ஒப்பாரி.

2 1 OCT 1924

பலவித்வான்களால் இயற்றியதை
உரிகம் ராபர்சன்பேட்டை புஸ்தகவியாபாரம்
த; வே. பொன்ரங்கமுதலியாரை
கேட்டுக்கொண்டு
சூ... முனிசாமிமுதலியார்
அவர்களால்

...சென்னை,
...லம் பிரஸில்,
...க்கப்பட்டது.
...922. அணா 4.

O-,86x.
N22
149277

உ

நூதன பெரிய

பலபேர்பாடிய ஒப்பாரி.

2 1 OCT 1924

பலவித்வான்களா இயற்றியதை
உரிகம்ராபர்சன்பேட்டை புஸ்தகவியாபாரம்
த. வே. பொன்னரங்க முதலியாரை
கேட்டுக்கொண்டு

காலஞ்சென்ற.
ஸ்ரீ-முனுசாமி முதலியார் பாரியாள்
அம்மணி அம்மாள்.
சகல சுதந்தரமும் பெற்றுக் கொண்டு.

சென்னை:—ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ்.
இதன் விலை.] 1924. [அணா 4
ரிஜிஸ்டர்ட் காபிரைட்.

உ

நூதன பெரிய

பலபேர் பாடிய ஒப்பாரி.

விநாயகர் துதி வெண்பா.

ஆனைமுகனே அருளைங்கரத்தோனே
வானவர்கள் தான்புகழும்—கானமயில்
வேலவர்க்குமுன்பிறந்த வித்தகனேபாடவரம்
பாலனுக்குத் தந்தருள் கண்பார்.

விநாயகர் துதி ஒப்பாரி.

சங்கரனீன்றெடுத்த ஐங்கரத்துமுகத்தோனே
சண்முகப்பிள்ளையாரே யுண்மையுள்ளவிநாயகனே
சத்திவிநாயகனே உத்தமியாள்புத்திரனே
செகமெங்கும்புகழ்படைத்த மகிமையுள்ள கணபதியே
சருவாதிஜெனங்களுக்கு குருவாயுதித்தோனே
சகலகலைவல்லோனே பகலபோலநிறைந்தோனே
சட்டமுடனேயுமக்கு திட்டமதாவே[illegible]
சக்கரை அவல்கடலை மிக்கநல்லயெள்ளுருண்டை
சமைத்தயிட்டிலிதோசை சுவைக்குமதிரசம்
சண்முகப்பிள்ளையார்க்கு உண்ணும்படியமுது
சம்பங்கிசம்பா வெண்மைநிறம்பால்சம்பா
சனபோகசம்பா யினமானநல்லசம்பா
சர்க்குணிசம்பா அற்புதமானசம்பா

சைவமல்லிகைசம்பா துய்யநிறமானசம்பா
சங்கையிலுயர்ந்தசம்பா தங்கநிறமானசம்பா
சாத்துவேலைச்சம்பா நேர்த்தியானபூஞ்சம்பா
சராசரத்தைகண்டசம்பா சிராசிரத்தையாண்டசம்பா
சகலசம்பாவகையில் பெருமையுள்ளகோடஞ்சம்பா
சர்க்கரைபொங்கலிட்டு நற்கையாலேதொட்டு
சாதிதேங்காயுடைத்து மேதினியில்பழவகைகள்
சரிந்தமுந்திரிக்கனியும் நிறைந்தபிலாக்கனியும்
சரவாழக்குலையும் நிறமுள்ளமாங்கனியும்
சகலபழமும்பரப்பி பகல்விளக்குமாவிலிட்டு
சத்திதரும்சிவந்தி வித்தைபெருமவிசகோந்தி
மைத்தகொண்ணத்தும்பை மன்மதயிக்கதும்பை
சாதிஅருகுபச்சை உச்சிதமானநிர்சை
சாதிபச்சைதுளசி மேதினியில்மணம்வீச
சந்தணங்கஸ்தூரி புனுகுசந்தபரிமளத்தர்
சரமல்லிகுடமல்லிகை வாழுள்ளசெவ்வலரி
சாத்தலரிகோத்தலரி நேர்த்தியானமலர்களெல்லாம்
சரியாகக்கொண்டுவந்து பிரியமுடன்பிள்ளையார்க்கு
சாம்பிராணிகற்பூரம் தீம்தாமெனவெனவே
ஓம்கணபதியாயநமா யோகதந்திராயநமா
ஏகதந்திராயநமா யேகக்கபிலாயநமாவென்று
சாற்றியேகைக்கட்டி போற்றியேயான்பணிந்தேன்
சருணை ... ளம் திரமானகிண்ணாரம்தமுரு
சவிளிகடுக்கனமேல்முருகுவொலியாம்வயிரமுடி
சப்பாணிபிள்ளையார்க்கு தப்பாமல்தலைகட்டி
உருவாமல்சலியாமல் கொண்டுவந்தமாணிக்கம்
புஷ்பராககோமேதகம் சங்கரர்க்கும்மாணர்
ஐந்துகரத்தானே ஆனைமுகத்தோனே

இலாவணி.

அப்பளமுதலவல் கடலைமேதா சை
அரியாதரம்பச் சை
அரும்பயராகுங் கடலைமொச் சை
செப்பிடுங்கடலை சுண்டல்கள் மோதகம்
தினமாங்கரும்பச்சை அளவின்றி
செய்திடுமாம்பச்சை

உத்தார்.

திப்பியேமாங் கொட்டைக்கருணி
அன்னஞ்செய்து அன்னஞ்செய்துநான்
திரியாய்வாழையி லவல்பெய்து
யவல்பெய்து யான்
அப்பணியீசனருள் மகன்தா ளை
அணிந்து பணிந்துநா டி
மதனதுதிருகதை தன்னைபா டி.

அஷ்டாதேவதை ஒப்பாரி.

ஓமென்னுச்சரித்து ஆமென்றுநிச்சயித்து
ஓதுவேன்மதன்கதையைமாதுரணதுர்க்கைவீரி

ஓரிமசானருத்திரி வாகிடாடேரிசூரி
ஓங்காளிசாமுண்டி சகசண்டிநீலகண்டி
ஓட்டிகரப்பிகளாபயிரவி குட்டிசாத்தான்தூமாதேவி
ஓடிவாயிருசிபயிரவிபகவதி கூடியாயிவிராயிமகமாயி
ஓசந்தயெல்லக்காமல்லக்கா இசந்தபொம்மக்காயெல்
உதிரக்காட்டேரி கூளிபிதிர்தேவதைபிடாரி [லக்கா
உத்தண்டிகுளிர்பேச்சி பத்ரகாளிமாரி
உதவாமூதேவியிருளி பிசுவாவராகி துர்க்கி
ஓலிதரும்சக்காதேவி பலிகொள்ளும்காத்தவராயா
ஓண்டிமுனிசண்டிவீரா சண்டப்ரசண்டதுண்டா
ஒப்பாதமிருசாகரப்பா அப்பாஅனுமாபேதாளா
ஓடிவாநீங்களெல்லாம் பாடியேபானனுக்கு
ஒத்தாசையாயிருந்து சத்துருக்களில்லாமல்
ஒருநிமிஷநேரமட்டுங் குறையொன்றுவாராமல்
உதவிசெய்யவேணுமென்று மிதமாகவுங்களுக்கு
மூன்பதுயிரல்பிரட்டு அன்பதுஆட்டுக்கரியை
ஒருவிதகொழம்பாக்கி அறுபதுகோழிபொரித்து
உருண்டை கைமாகவரப்பு
திரண்டரொட்டிகளனந்தம்
உப்புகருவாட்டுபொரியல் அப்பளம்கஞ்சாசுருட்டு
ஓர்நிறைத்தபீப்பாயில் நேர்நிரைந்தசாராயம்
உதிரம்பிரட்டியுங்கள் எதிராகயான்படைப்பேன்
உறுதிபட்டென்வாக்களிப்போபிரதி மொழிசொல்லாமல்

மதன் சரித்திர ஒப்பாரி,

அங்கவர்ணிப்பு.

அரிமாயனீன்றெடுத்த பரிபாலனங்குஜர்க்கு
அத்தர்புனுகசனால் மெத்தமுழுகவிடுத்து
அபரஞ்சிபட்டதினால் விபரீதமாய்த்துடைத்து
அச்சுதிருநாமமிட்டு பச்சைதொங்கல்முருகு
ஆணிபொன்கடுக்கன் காணிக்கையாய்ப்பூட்டி
அசையுமிருபுரத்தில் புஜகீர்த்தியுந்தரித்து
அகண்டதிருமார்புதனில் தாவண்டமுத்துமாலைகளும்
அஸ்தகடகமுடன் தஸ்தாகணையாழி
அம்புயபாதமதில் கெம்பீரதண்டைமிஞ்சி
அங்குஜர்க்குநான்பூட்டி மங்களஜெயமென்றுநாட்டி

ஆதிசத்திபார்வதியும் சோதிலட்சுமிதேவியரும்
அல்லவருந்தான்கூடி மெல்லிரதியாள் தனக்கு
ஆத்திச்சலமெடுத்து நேத்தியுடனேவிடுத்து
அபரஞ்சிபட்டதினல் விபரீதமாய்த்துடைத்து
அனேகவிதம்பிறத்தியை அலங்கரித்து
அங்குஜனோள் திலங்குமிடதுபுறம்
அமரா.க்காரனைத்து சமர்த்தமன்னர்தேவர்களும்
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
அருந்ததியைப்பார்த்து வருந்தியேகைகோர்த்து
அக்கினியைசாட்சிவைத்து திக்கென்று தன்குருவே
அரி அரனையும்நினைத்து பரிசேனையும்தணிந்து
அரிவோபசிவாயவென்று பரிசேனையும்தனித்து
அணிந்தாமிராதிசமுத்தில் கணித்தமதனெல்லவரும்
அதிர்வேசேஷையிட்டு ரதிமதனுந்தானெழுந்து
அல்லவர்க்குதெண்டனிட்டு வல்லமதனுமரதியும்
அன்னத்தின்மீதில் ரதிகன்னியரையேத்திவைத்து
அச்சுதனார்தன்மகனை பச்சைகிளிமீதில்வைத்து
அதிகவைபோகமுடன் பதிதனில்கோலம்வர
அண்டங்கிடுகிடென்ன மண்டலத்திலவர்கள்பின்ன
ஆஞ்சுமுட்டிவிட கோலம்வந்ததின்பிறகு
ஆணிப்பொன்பந்தலிலே மாணிக்கம்பாய்விரித்து
அதிலேயிருவரையும் ரதியும்மாணுடியபின்
அண்டர்முனிதேவருக்கும் பெண்டுகட்குமேயமுது
அளித்துதாம்பூலமே களித்துமவர்வாழ்த்தல்செய்ய
ஆதிசிவனப்பொழுது சீதனமாய்பெண்ரதிக்கு
ஆரோக்கியாபுரத்தை சீராகவேகுடித்து
அங்கஜர்க்குமுடிசூட்டி மங்களசெயமென்றுநாட்டி
அன்பாகவாழ்ந்திருந்தார் இன்பரதிமன்மதனும்

ஆசுஷிகாமாட்சி விசாலாட்சிமீனாட்சியும்
னாட்சிவதனமெச்சி சூட்சியெனுவாரிடச்சி
ஆர்விழிச்சிகார்புரச்சி பேர்கடச்சிகார்நடச்சி
ஆரணத்திகாரணத்தி சீரணத்திகிரணத்தி
அம்பாஜெகதம்பா மீனாம்பாபென்பாலுமர்ந்த
ஆதிசத்திபத்மினியாள் சோதினவினபதத்தால்
அம்பிகைபெண்வாலையவள் யின்பமுடனீன்றெடுத்த
அரிவைசிகாமணியே பரிவைசிரோண்மணியே
அழகுமனோன்மணியே திகழூமென்கண்மணியே
அன்னரதியேகுயிலேவர்ணயயிலேஉனது
அமைத்தசித்திரரூபத்தைநான்
மதித்துகவி சொலவனடி
அருங்கூந்தலுக்குநிகர் கருங்கொன்றைகாருருளும்
அண்டுகூந்தல்பனையும் தண்டுளவுங்கார்பணலும்
ஆர்பெருத்தவண்டிணமும் சீர்பொருத்தமில்லையடி
அழகுமூன்றாயபிறையோயிலகுநெற்றிக்கிணையென்று
அரைந்தாலுமொவ்வாது குறைந் தவயர்ந்திடுமே
அரும்புருவம் வெண்பிரையோ
கரும்புருவமே உனக்கு
அடருங்குமிழ்செண்பகமோ திடமுள்ளனாசியடி
அற்புதமேஉன்காதுரெண்டும்
பொற்புவள்ளிகத்திரியே
அமைத்தகன்னம்கண்ணாடி சமைத்தகற்சாணையடி
அந்தமுள்ளபல்வரிசை சநம்யில்லாயேபவளம்
ஆணமுத்துகோர்வையடி தோணுமுந்தன்பல்வரிசை
அங்கமேநகைத்தால் யெங்கும்பிரகாசமடி
ஆடுமயிலினமே தேடும்திரவியமே
அமுர்தகண்தேனு குமர்தமொழிக்கொவ்வாது
ஆசாரசொல்லழகி நேசமுடனழகி
ஆனந்தமேகொடுக்கும் மோகனப்பசுங்கிளியே

அம்புலியைநேர்க்கடிக்குஞ்
சம்ப்ரமுள்ளஉந்தன்முகம்
அசைந்தகமுகோறதியே வொசந்தவரிகழுத்து

இதுவுமது.

அய்ன்புடைத்தோளழகை னியமித்துசொல்வனடி
ஆதிசேடனுமதிப்பான் மாதரசேஒத்தநங்கை
அடர்ந்துதிரண்டுவிம்மி மாதரசேஒத்தநங்கை
அம்பொன்குடங்கலசம் பம்பரம்பந்துகிண்ணம்
ஆணிபொக்குசெப்பனிட்ட மணிமொக்குபூங்கலசம்
ஆகுமென்றாலுமது போகசுகமில்லையடி
ஆரிலையென்றாலும்வயர் சாலப்பழித்திருக்கும்ஆலிலை
அந்திரமின்னார்க்கொடியை
நிந்தைசெய்யமுந்தனிடை
அரியரபிர்மாதிகளுஞ் சுரர்முனிவர்சித்தர்களும்
அந்தணர்புலவர்களும் இந்திரனுஞ்சந்திரனுஞ்
அல்குல்க் கிணியிதென்று
சொல்வதற்கு மாளாது
அரிந்துரித்த வாழைத்தண்டும்
பெருத்தயானை தும்பிக்கையும்
அப்பாஞ்சி யிழைந்ததூணும்
உடயோகஸ்தம்பமென்னும்
ஆரணங்கே வுன்துடைக்கு
நேராகுமென்றாலும் உன் துடை
அடுக்காதுமோகனமே கிடைக்காதுபொக்கிஷமே
அலவனைபங்கமிடும் யிலகுமுழங்காலிடையே
அன்னமே உன்கணுக்கால்
என்னவென்று யானுரைப்பேன்
ஆய்ந்தவிராலெனினுஞ் சாய்ந்தொப்பமென்றிடினும்

அரிவயரேவுந்தனுக்கு சரியாகமாட்டாதே
அந்தமிடும்பாதமது கந்தமலர்மாந்தளிரோ
அரவம்படமெனினுன் கருடன்கண்டால்பயந்து
அரண்டெசுருண்டுவிடும் திரண்டமதிமுகத்தில்
அந்திவண்ணன் பெற்றெடுத்த
சுந்திரமுள்ள பெண்ரதியாள்
ஆயிரங்கண்ணிந்திரனும் நேயமுடனெனக்கு
அனுப்பியவோலையிதே தணிபடவேவாருமென்று
ஆசையினாலேயிதற்கு போகவிடைதாவெனக்கு
அடிமையிலேயென்றுரைத்தார் பிடிவாதமாய்வதனும்

இரதி சொல் தர்க்க ஒப்பாரி.

அங்கம்பதரிரதி திங்கள் முகம்பார்த்து
அல்லவோவெங்கணவா மெல்லியர்க்குற்றுணர்வாய்
அரனார்மருமகனே திருமால்தருஞ்சுதனே
அடியாளையிங்கேவிட்டு கெடுமிந்திரன்சொல்கேட்டு
அங்குஜனேநீர்போனால் இங்கேபுலம்பிடுவேன்
அன்னந்தண்ணீர் விடுவேன்

உன் எண்ணமே பிடிப்பேன்
அரைநாழிகை உனைப்பிரிந்தால் நிரையில்குறைந்திடுவேன்
அல்லும்பகலுமுந்தன் சொல்லைநினைத்திடுவேன்
ஆளுலும்உன்பிறகே நானும்வருவேனருகே
ஆகமவிதிப்படிக்கு தோகைரதியும்வணங்கி
ஆசாரசோடசுப சாரமுடனேதொழுது
அடுத்திருக்கையிலே அடித்தமதனேதுரைப்பா

மன்மதன் சொல் ஒப்பாரி.

அழகைபடைத்தவளே புழுகையணிபந்தவளே
அல்லிமலரின்சரமே மல்லிகைபூமணமே
அமுர்த்தமொழியாளே குமர்தவிழியாளே
அன்னநடையழகி என்னுடனேபழகி
ஆசைகொடுத்தபெண்ணே பாசமிருந்தகண்ணே
ஆயிரம்பொன்மாற்றுபெற்ற நேயபதுமையென்று
அமைந்திருகிறேன் யான்
சமைத்ததின் முகம்நோக்கி
அலங்காரமாயிருக்கும நலங்குலேந்துவாடிவரில்
அவ்விடத்திலெந்தனுக்கு பல்வவினைவந்ததென்று
அறிந்துகொள்ளென்றுரைக்கதெரிந்தாதியுங்கலங்கி
ஐயகோவென்றலறி கையைபிடித்துக்கொண்டு
ஆதிசிவன்தன்மகளும் யேதுரைப்பாளப்பொழுது

இரதி சொல் ஒப்பாரி.

காமராஜேந்திரனே பூமானேசீமானே
கரியவன்தன்மகனே அரியவர்க்கிசைந்தவனே
கட்டழகனேமதனே தொட்டணைந்தகோமானே
கன்னிபிராயமதில் சின்னஞ்சிறுவயதில்
கலியாணம்செய்துமுன்னே யிலகுபருவத்திலென்னை

கட்டியணையாமல் இஷ்டமுடன்வாழாமல்
கருதுமிந்திரனனுப்பும் பெருந்தூதர்கொண்டுவந்த
காகிதத்தைநீபார்த்து ஆயுதங்களையேயெடுத்து
காரணரேபோரேனென்று ஆரணத்திலில்லாதே
கருத்தையுரைக்கலுற்றீர் வொருத்திதனித்திருக்க.
கால்நாழியுன்னைவிட்டு மால்மகனேவேருபட்டு
கலைபிரிந்தமானதுபோல் பலைவிழுந்தவீடதுபோல்
கணைவனில்லாபெண்ணைப்போல் மணமில்லாபூவைபோ
கதிரில்லாவானம்போல் எதிரில்லாவீரனைப்போல் [ல்
கார்மழையில்லாப் பயிர்போல்
நேரிழையில்லா மானைப்போல்
கற்காத வித்தையைப்போல்.
நிற்காத பகுதியைப்போல்
கரும்பைவிடும் ஆலைப்போல்
விரும்புவாா மாதரைப்போல்
கவிசொல்லா வாணரைப்போல்
சிவமில்லா ஞானியைப்போல்
காற்றில்விட்ட பாய்மரம்போல்
சேற்றில்நட்ட சம்பம்போல்
கலங்கிஅழுதிடுவேன் புலம்பிநலங்குலைவேன்
கர்த்தனேநாமிருவர் நித்தமனமகிழ்ந்து
கலந்துயிருப்போ மென்றாள்
இலங்குமந்த பெண்ணரதியாள்

இரதி சொல் லாவணி.

கல்லுங்கரையுமுந்தன் கடின
மனதுகரையாதென்ன பாவம்
காலபருவமதில் கணைவனைபிரிந்தால்
காரியமென்ன லாபம்

(இதுவுமது.)

2. கொல்லுங்காமமெனக் கு
மீரியானதால் குணனேவேரு ம்
கோவென்றழுது வுன்னுசையினு லே
குரைவே னுயிர்போகும்

(இதுவுமது.)

3. அன்னம்பொசிக்கே ன்
அரண்மனையிலிருக்கே ன்
அரனிடம்நீர்போனு ல்
அலைக்கரும்புபோலலைந்திடுவே ன்
அரியாதவனுனு

4. மன்னுவுனக்கு மனம்வெருத்துபோச் சே
மனையாட்டின்மே லே
மாதாபிதாகுரு தெய்வமும்நீ ரே
மாலையிட்டதினு லே

5. சர்வலோகமும் சர்வஜீவமு ம்
சர்வமயமும் சிவ மே
தாட்சியமார்பேச்சை கேட்டீரானு ல்
தணலாவது நிஜ மே

மாணிக்க வச்சிரநீல ஆணிப்பொன்கட்டிலிலே
மெகாவுச்சிதமெத்தையின்மேல்
செகமெங்கும்மேமணக்கும்
மல்லிகைமுல்லைமலர் உல்லாசமாய்ப்பரப்பி
மக்தாப்புசாலுவையே விஸ்தாரமாய்பரப்பி
மருவுபன்னீர்புனுகுசிறுசவ்வாதுமேல்தெளித்து
மகிட்சியுடன் படுத்து புகட்சியுடனிருந்தால்
மாதவன் தவமகிழ்ந்து தீதேதுமில்லாமல்
மருவவேவாரேனென்பார் கரியமால்தன்மகனும்

மதன் சொல்லல் லாவணி.

தேவர்சபைபோய்வருவனடியேமா னே
தெண்டில்ரதமேறிதா னே
ஆவலுடனழைத்தவிபரங்கண்டுனே னே
அரனிடஞ்சென்றுதா னே

உத்தார்.

பாவநாதித்தன் தவந்தனையழித்தின் று
பஞ்சமலர்களையும் கரமதில்கொண் டு
கோவமாரியண்டர் போற்றிடயின் று
குஞ்சரமேஉலகம் புகழ்ந்திடசென் று

தேவர்சபை.

போகாதிருந்தால் ரிஷிமுனிவர்கள்கூ டி
புவிதனிலென்னைத்தே டி
யோகாதியார் வழிந்திடும்நா டி
சாயங்கொடுப்பாரேசே டி

உத்தார்.

பாகசாதனனெடுப்படைகொண்டுனே னே
பைங்கிளியேகைலைமலைசென்றுத்தா னே
வேகமாகபோகதடுக்காதேமா னே
வீதியோனமைத்தபடிவருவனடிதே னே

தேவர்சபை.

மாரன்கணைதனை ஜெயிப்பவர்களுண் டோ
மலர்கணைக்கிணையுண் டோ
தீரமெந்தன்தொழுலில்லாமல்படைப்பதுண் டோ
தேன்மொழியே சொல்ரெண் டோ

உத்தார்.

காரணகாரிய மெனையன்றிவே ரே
காணுமதோசிவன் தவமதின்நே ரே
ஆரிழையேபழித்து வருமெந்தன்தே ரே
அரைநிமிடம்தருகாமலே வரும்பா ரே

தேவர்சபை.

பாராதிப்அண்டமும் நிறைந்திடும்புகழ்நேச ன்
பரசிவகுருவாச ன்
ஆரர்தாரமாக விளங்கிடும்பிரகாச ன்
அரகராமுருகேச ன்

உத்தார்.

மாராகிருணைமொழி குமரேசவேலைய ன்
மாசில்லாசுப்பிரமண்ணிய பன்னிருகைய ன்
சீராருமவர்சீடன் குழந்தைவேல்மெய்ய ன்
செகம்புகழ்ந்திடுங் கவிபார்த்துஇன்னேர ம்

தேவர்சபை.

நாயகனேயென்கணவா மாயவனருள்புதல்வா
நகராண்டமன்னர்களில் புகழும்நளச்சக்கிரவர்த்தி
நருமபிமராஜன்பெற்ற தருந்தமயேந்தியென்ற
மங்கையைமணமுடித்து மங்களமுடனிருப்போர்
நல்லனிடதபுரத்தை யெல்லாமொருகுடைகீழ்
நகராண்டிருக்கையிலே விகமுடனேசனியன்
நான்கோரினப்பெண்ணை யேனவன்மணஞ்செய்தான்
நல்லதாகட்டுமென்று சொல்லியவன்தானெழுந்து
நாகம்போலச்சீரி வேகமுடன்புஷ்கரான்றன்
நன்னெஞ்சினிற்புகுந்து வன்னெஞ்சமாயவனை
நளராஜனுக்கெதிராய் தளபகடையாடவைக்க

நங்கைதமயந்திபார்த்து அங்கமெல்லாம்பதரி
நடுக்கமுடனேனளனை நெடுக்குஞ்சூதாடுவது
நமக்குசரியல்லவிது உமக்கு அழகல்லவென்று
நமஸ்கரிக்கிறேனென்று தமயந்தியும்நின்றுநின்று
நால்வேதசாஸ்திரத்தின் நூல்வழியெலாமுரைத்து
நளராஜன்கேளாமல் திறமாயவர்துணிந்து
நாடுநகரம்வர வோடுமுதலுள்ளதெல்லாம்
நஷ்டமாய்சூதாடி யிஷ்டமாய்தோர்த்துவிட்டு
நாயகியைபிரிந்து நேயருதுபர்ணனிடம்
நஷ்டகஷ்டங்களைப்பட்டு
கெட்டலைந்துசேர்ந்தாரே
நாதாபெண்வார்த்தை தனை நீதாயெண்ணுதேனினை
நல்லபுத்திநானுரைத்தால் புல்புத்திநீநினைந்து
நடக்காதேயென்றுசொன்னாள்
அடக்கமாய்பெண்ரதியும்

இரதி சொல் லாவணி.

மன்னா நானென்ன செய்குவேன்
யெனைபுரிந்தாய்
மன்னா நானென்ன செய்குவேன்
மன்னா யெனைபுரிந்து
தன்னைத்தனியேபோக
யென்னுதப்பிதஞ் செய்தேன்
சொன்னாலல்லவோ தெரியும் (மன்னா நா)

சின்னஞ்சிறுவயதிலே
யென்னைதேடி
சீர்மாலையிட்டுவைத்தீரே
நன்னயமாக உந்தன்
கன்னல்வில்லையெடுத்து
உன்னதமாகப்போரீர்
யென்னகாரணத்தாலே (மன்னா நா)

மதன் சொல் லாவணி.

கலாபமயிலேகுயிலே சலாபஷயிலேகயலே
கற்பகமேபொற்பகமே அற்புதமேவிற்பனமே
கண்டமணிசிரோன்மணியே பொன்மணிமனோன்மணி
கருத்திலிசைந்தமட்டும் விருத்திக்கசொலவனடி [யே
கார்புவியில்வாழ்கையிது நீர்மேல்குமிழியடி
கருவுகள்தொண்ணூற்ருறு நரம்புஜவ்வுமூளையுடன்
கால்ரெண்டுடையபொம்மை
மேல்கொண்டெடுத்துநம்மை
கதிமோக்ஷவழியைவிட்டு கதிகெடுக்கசெய்யுமடி
கண்ணுக்குப்பார்வையடி மண்ணுக்குள்நாற்றமடி
கசுமாலபாண்டமடி விசுவாசம்வையாதே
சூடும்வாழ்வைநம்பாதே படுகுழியில்தள்ளிவிடும்
காரிகையேதேவர்சபை நேரிழையேயனுப்பு
கற்பகாலம்வரைக்கு அற்புதமாய்பேர்விளங்கும்
கலங்காதேயென்றுசொன்னார் யிலங்குந்திருமகனும்

மதன் சொல் லாவணி.

நொண்டிச்சிந்து.

திருமால்மருமகளே ஆஆ
திருமால்மருமகளே உனக்கு

சித்திரபதுமையும்
விசித்திரமாய்
பருவயிளவயதாய் யின்ப
பாசநேசப்பிரகாசமுமாய்
தருகிறேனுச்சிதமாய் அதனை
தாவித்துயெனைபோல
பாவித்திரு ஆகா
திருமுகம்வேருகினல்
திருமுகம்வேருகினல் யெனக்கு

நீ தென்றறிந்துகொள்ளு மாதரசே
தனத்தோம் தனதனனம்
தனத்தோம் தனதனனம்

இரதி சொல் நொண்டிச்சிந்து.

சித்திரபதுமையுமே ஆகா
சித்திரபதுமையுமே கையாலே
சின்னஸ்தனத்தை
பிடித்திடுமோ அது
முத்தங்கொடுத்திடுமோ காம
மோகரஸமெனக் கீய்ந்திடுமோ
நித்தம்படுத்திடுமோ வாயாலே
நேசவுல்லாசமாக பேசிடுமோ
பத்தாவே உந்தனைப்போல் அமுர்தம்
பக்ஷிக்குமோயென்னை
ரக்ஷிக்குமோ (தனத்தோம்)

மதன் சொல் லாவணி.

பெண்ணரசேகேளடி நீயும்
பேதைமனதுகொண்டோடுகிறாய்
மண்ணகமும்நகைக்கும் நின்மொழி
மலரதினாலொருசெண்டுகட்டி
வண்ணமுடன் தருவேன் அதினிட
வாசனைவிட்டுமேவாடிவரில்
அண்ணல்சிவன்விழியால் யெனக்கு
ஆபத்துவந்ததென்றறிந்துகொள்ளு (தனத்தோம்)

இரதி சொல் லாவணி.

தொட்டணைந்தக்கணவா யென்னைநீர்
விட்டேகினாலும் ஒய்கட்டழகா
பட்டணம்விட்டிடுவேன் யென்னிட

பாங்கிகளைவிட்டேகிடுவேன்
கட்டையடிக்கிக்கொண்டு உடலை
கட்டையிலேவைத்து
எட்டமாவேன் யென்
மட்டில்லாமாணிக்கமே யென்னிட
யிஷ்டப்படியே யிருந்திடுவீர் (தனத்தோம்)

மதன் சொல் லாவணி.

பஞ்சணைமெத்தையின்மேல் ஆகாய
பஞ்சணைமெத்தையின்மேல் அன்புடன்
படுத்துமுத்தங்கொடுத்தகனிரசமே
ரஞ்சிதமேதனமே கனமே
ரத்தினமே விசித்திரமே
னெஞ்சங்கலங்காதே இருவரும்
நித்திரைசெய்யலாம்உத்தமியே
வஞ்சியே அபரஞ்சியே உன்னிட
மைதீட்டுங்கண்கள்கலங்காதே (தனத்தோம்)

இரதி சொல் லாவணி.

நித்திரைசெய்யவிட்டு ஆகா
நித்திரைசெய்யவிட்டு னடுஜாம
நேரத்திலே போகநீருரைத்தீர்
சித்துவித்தையிதுகாணும் யானும்
சிறுபெர்ழுதிதைபோய்கற்றவள்தான்
உத்தமனேயெனக்கு சத்திய
உறுதிகொடுத்தால் உறங்கிடுவேன்
வித்தகனப்பாவுசொல் தப்பாமல்
விட்டிடுயிந்திரன்
தட்டிடுவீர் (தனத்தோம்)

இரதி சொல் தர்க்க ஒப்பாரி.

புண்ணியனேயென்கணவா மண்ணுலகிலேயிருக்கும்.
பொன்னேவிடுமோனிரமும் தன்னேவிடுமோனிழலும்

பூவைவிடுமோ யாமணமும் நாவைவிடுமோருசியும்
பூதம்விடுமோபணத்தை வாதம்விடுமோகுணத்தை
புழுதிவிடுமோநிலத்தை நிழலும்விடுமோமரத்தை
போரைவிடுமோனிலையை நீரைவிடுமோஅலையை
பொருளைவிடுமோவாசை மருளைவிடுமோபூசை
புண்ணைவிடுமோஉதரங் கன்றைவிடுமோபசுவு
புனுகைவிடுமோவாசம் தினையைவிடுமோகிளிகள்
பூனைவிடுமோயெலியை தேனைவிடுமோயீயும்
புருஷன்விடுவானோபெண்ணை அரசனேநீருமென்னை
பொட்டெனவேவிட்டுயிந்திரன் யிஷ்டபடிநீபோனால்
பூதலத்தில்யானிருந்தேன் ஆதரவாரெந்தனுக்கு
புவியிலடுக்காதுமன்னா பாவியிருந்தாலுமென்ன
போகாதேநாமிருவா யேகபோகத்துடனே [னேரம்
பொங்கமுடன்வாழ்வோமென்றாள் மங்கைரதியன்

மதன் சொல் ஒப்பாரி.

சங்கரனார் திங்களணி கங்கைபணிமங்கைப்பாகன்
சாம்பசிவனாரீன்றெடுத்த பூந்தேம்பலழகானயெந்தன்
சரசரதியாளே தசவசன பெண்ரதியே
சய்யோகரஞ்சிதமே ஒய்யாரமானகண்ணே
சகத்தில்மாதர்களிசைந்த சுகந்தருஞ்செந்தேனே
ஜாதியிலுயர்ந்தமல்லிகையே
ஜோதிமயமானகண்ணே
சல்லாபரதியாளே சொல்மொழியைக்கேளாயோ
சராசரநிராமயமானோர் பராபரவஸ்துவானோர்
சண்முகனையீன்றயீசன் கண்மூடிசெய்தபத்தால்
சட்டமுடனேகியீசன் விட்டஅனல்தணிந்து
க்ஷணமதினில்வாரேனடி மயங்காதிரடி
சரசகொட்டிலிம்மாரன் புருஷனவர் தானுரைக்க
சடையாண்டியீன்றெடுத்த
பேடைரதியேதுரைப்பாள்

இரதி சொல் ஒப்பாரி.

சாரங்கபாணிபெற்ற ஒய்யாரமேனியனே
சரசசம்மாரலீலா என்வசனகெம்பீரலோலா
சாமிமதுவேன் துரையை பூமிசைஎன்னைவிட்டு
சமராபுரிபோறேனென்றீர் அமரர்குறைதீர்ப்பனென்
சாதிகாரஉந்தனையானிதுகாலம் நம்பிருந்தேன் [றீர்
சதிசெய்துநீர்போனால் இரதியாளலைந்திடுவேன்
சதிர்புருஷனேஎன்கணவாநீர்போகவேண்டாமென்று
சாதித்துரைத்திடவே நீதியுள்ளவென்துரையே

மன்மதன் சொல் ஒப்பாரி.

சண்டாளம்போலசீரி
கொண்டல்வண்ணன் தன்மகனார்
சலித்தழுதரதியாளே மதிக்கேடோவுந்தனுக்கு
சகியேஉன்னுடையமையல் கொண்டுநானிருந்தால்
சமயமில்லைஇப்பொழுதுஉபபோகசபைக்குசென்று
சடையுடையயீசன்பேரில்
என்ஐந்துமலர்க்கணைதொடுத்து
சங்கரனார்தவமழிந்துயான்மங்கள மாய்வரேனென்று
சப்தகிரிகளும்நடுங்க அஷ்டதிசையுங்குலுங்க
சட்டென்றுதானகிளம்ப கட்டழகிபெண்ணறதியாள்
சால்வையேதான்பிடித்து மேல்விழுந்தழுதமிட்டு
சாரைபோல்நெளித்து காலில்விழுந்தழுது
சாகவேபோரீரோ திரும்பிவரபோரீரோ [ள்
அச்சுதனார்கண்மணியேபக்ஷமுடன் சொல்வதைக்கே
சங்கரனார்என்தகப்பன் கங்கையணிமங்கைபாகன்
சாம்பசிவனார்தவசை வீம்புடனழிப்பனென்றீர்
சப்தமிட்டுநீர்போனால் அபதம்வந்துநேர்ந்துவிடும்
சாராசரமண்டலமெல்லாம் திருமிக்ககார்த்தவரும்
சாமிமேல்படைதொடுத்த பேர்களிந்தபூமியில்லை
சாமிபகையாகாது பூமியிலிருப்பவர்க்கு

சரசம்போலநீநினைத்தால் விஷந்தலைக்கேரிவிடும்
சடுதியிலிறங்காது நீபடியில்மடிந்திடுவீர்
சங்கையல்லவுந்தனுக்கு மங்கைசொல்லைதடுக்காதீர்
சலித்துபிரண்டழுதாள் சங்கரியாள்பெற்றபெண்ணு

மதன் சொல் ஒப்பாரி.

அகிலபரிமளமே வொயிலாளேமானிலமே
அஞ்சுகமேபஞ்சுவடி கொஞ்சுக்கிளிவாகனமே
ஆணும்பெண்ணறதியே தேனேநீகேளுமடி
அண்டத்துதேவரெல்லாம்
இந்திரன்ராஜன்செங்கோல்
அவரேரும்வாகனந்தான் அதிகபலமுள்ளதடி
அங்காரதாழ்வதராய் செங்கருடன்வாகனத்தோன்
அரியதாய்யிருக்குமந்த கரியருடவெள்ளானை
அன்னொருநாள்வெள்ளானை தண்ணீர்குடிக்கவேதான்
அடர்ந்ததாமரைசூழ்ந்த தாடாகத்தைதேடிவந்து
அடிவைத்துபடியிரங்கி மடுவில்ஜலத்தையள்ளி
அமோகமாவுண்ணயிலே கொழுந்தனைகாலைபற்று
ஆழத்திலேயிழுக்க வேழமதுகூச்சலிட
அமரர்முனிதேவர்களே எம்பிரமநாதரே
கூச்சம்வந்துநேர்ந்ததையோ வச்சிராயதந்திரனே
அரகராபரமேஸ்பரா திரிபுரமெரித்ததேவா
அபயஅபயமென்று அயிராவதங்கூச்சலிட
அந்தஆபத்துகுதவாமல் தேவரெல்லாம்போக
அதுவிதியால்வெள்ளானை துதிக்கைசலத்தில்வைத்து
அரண்டுபுரண்டழுகையில் அக்ஷமேவேல்விழியர்
அனுப்பிவிட்டார் சக்கரத்தை
அதளசுதளநடுங்க முதலைகழுத்தருக்க
அதுசிரசுரெண்டு துண்டாகபோயிடவே
அரிராமர்செய்தாரோடி என்ஆசைகிளிமொழியே
ஆனதோர்யென்தகப்பன் அரிராமர்தானிருக்க
அச்சபயமில்லையடி மச்சத்தின்கண்ணழகி

இரதி சொல் ஒப்பாரி.

அங்குஜனே என் கணவா சிங்காரநற்றுணவா
அற்புதனேயென் மதனே சற்குணவிவேகமுள்ள
ஆண்சிங்கமேகனமே நானணியும்பூஷணனே
அணைந்துசுகங்கொடுக்கு மண்ணலேஎன் துரையே
அதிவந்தனேஇரசவசனே என் ஆசைக்குகந்தமன்னு
அழகுபச்சைமேனியனே புகழுடையமார்போனே
ஆசைவிட்டீரோயிப்போ மோசம்செய்வதுமிப்போ
அன்பெல்லாமெங்கேவிட்டீர் இன்பமுள்ளஎன்கண
அரைநாழியும்மைவிட்டுபிரியலியேஇந்தமட்டும் [வா
ஆதரவாயெந்தனுக்கு மாதவனின் மகனே
அதிகசிங்காரமுள்ள மதிவதனகெம்பீரா
அண்டர்சபையைநீர்போனால் பெண்டாலேந்திடுவேன்
ஆதிபரன்என் தகப்பன் சோதிமயீஸ்வரனார்
அங்கணையையேவுனது சங்கையல்லவுந்தனுக்கு
ஆதியிலேதிரிபுரத்தை பாதிமதியோடெரித்தார்
அதுபோலேநேருமையா அதிவீரமன்மதரே

இரதி சொல் லாவணி.

சிதம்பரந்தன்னில்மூவருங்கூடி ஜெயம்பெற்ற
காளியாால்வாதுகள்பேசி தண்டர்கினிகினி
கலகலவென்றிட அண்டர்சூழும்புகழரசர்
மகிழ்ந்திட்டின்டுபாதமுதுண்டு மேலதைதூக்கியே
பரமன்மேல்பாணம் விடுத்தீரேயாமாகில்
பஸ்ப்பமாகவேயுன்னை யெரித்திடுவாரையா-பரிமள
சகலகினி-டிகுடென்ன-டெடிடீன்ட
தாண்டவம்செயப்பெற்ற
காளியால் செவிப்பார்சிவனவர்

இதுவும் ரதி ஒப்பாரி.

மாரனே பரமனிடனேரொருவர்பேசினவர்
அப்பவேமுப்புரந்திசனை

என்தகப்பன்தப்பாமல்தானெறிந்தார்
அரனென்றுதெரியாமல் ஆதிபராபரன்மேல்
அக்கணையைநீதொடுத்தார் அவயங்கமெல்லாம்பதரி
அகங்காரங்கொண்டுமிக அக்கினியால்கண்திறந்து
அனலாபெரித்திடுவார்
ஆதிபராபரன்மேல் நீதியல்லகணை தொடுக்க
அடிபாள்சொல்தட்டாதீர் வடிவழகுமன்னவனே
ஆனந்தமார்பழகா யேனிந்தவாதுனக்கு
ஆர்கலைத்தார்உன்கருத்தை பார்மீதிலேவரியேன்
அண்டர்சபைக்கேகாதீர்
ஆலிலைமேல்பள்ளிகொண்ட நீலமேகன்தன்புதல்வா
அரிந்தமட்டுஞ்சொல்லுகிறேன்
தெரிந்தமட்டுமொருசேதி
அன்றுமார்க்கண்டனுக்காய்
ஐண்டனைவிழஉதைத்தார்
அன்பன்சிறுத்தொண்டனுக்கு
இன்பமுடன்மோக்ஷம்தந்தார்
ஆதலாலவர்மீதுவாதேனோ இப்பொழுது
ஆகாதுயென்துரையே போகாதீர்தெய்வசபை
அல்லவோய்என்கணவா
சொல்லவொண்ணு கேளுமையா
அலண்டுபிரண்டழுதா ளன்னரதிகிளியாள்

மதன் சொல் லாவணி ஒப்பாரி.

பத்தர்முத்தர்சித்தர்தொழும் சத்தியேபாரத்திபர
சத்திமதர்விர்பன்த்தி சத்திமகாசத்திமாயே
சத்திஉக்கரசத்திவாலை சத்திசர்ப்பாத்திபெற்ற
பத்தினியேவொருமொழிகேள்
பதரும்துவாபுரியுகத்தில ஜெகமாண்டராஜர்களில்
பாண்டிராஜன்மனைவி வேண்டியேபெற்றெடுத்த

149277

பஞ்சபாண்டவர்களவர் நெஞ்சுங்கலங்காமலவர்
பத்தினிதுரோபதையை வித்தவனமாமலையிடு
பகையுண்டுகுரோதமுண்டு அகமுண்டுதுரியனுக்கு
பள்ளிகூடத்தில்கற்ற தெள்ளியேவித்தையிலும்
பாதிநாடுகொடுத்த தேசிமிகதெரிந்து
பருவமுடனேஜகுனி திருதமகாராட்டிரனுக்கு
பக்குவமாதிரியனுக்கு முக்கியமாய்சொன்னதினால்
பசும்பொன்மணியதனா லிசையுமண்டபத்தைசெய்து
பாண்டவரைதானழைத்து சீண்டியேகாண்பித்து
கபடசூதாடி விகடகவிதிரியன்
பங்குராச்சியம்தனையும் பொங்குசட்டிவோடுமுதல்
பத்தினதுப்போதாமல் உத்தமர்கள்மனம்நோக
பாரசபைநடுவே கோரமாதுரோபதையை
பங்கமாகநிற்கவைத்து அங்கத்திலேயிருந்த
பட்டாடைதனையுரிய நிஷ்டூரமாயவனும்
பச்சைமாலைதுதிக்க விச்சத்திரமாகமாயன்

இதுவுமது.

பண்ணவேதுகிலனேகம் பெண்ணுளுடையகூந்தல்
பாரில்புரண்டிடவும் சீரியழுதிடவும்
பார்த்தபீமனர்ச்சுனனும்யேர்த்தகெதைதானெடுத்து
பதராதேதம்பியென்று சதுராகசொன்னதினால்
பனிரெண்டுவருஷங்காட்டில்
இனியொருவருஷங்காட்டில்
பருத்தவனவாசஞ்செய்து
சிருத்துஎங்களிடம்வந்தால்
பாதிநாடளிப்போமென்று ஓதினான்துரியோதனனும்
பஞ்சபாண்டவரும்மெத்த நெஞ்சங்கலங்கியந்த
பாவைதுரோபதையுடனே மேவிநாளைத்துலைத்து

பாதுகார்த்தமாயனையே தூதனுப்பிபோர்முகத்தில்
பத்திவந்தஜகுனியையும்
வெற்றிபெற்றதுரோணனையும்
பாட்டனென்றவீஷ்மரையும் வெட்டும்படுகளையும்
பாவிதுரியோதனையும் மேவியேகர்னனையும்
படைவீரர்நடைவீரர் கொடிவீரர்முதல்வரையும்
பந்துகளனைவரையும் நிந்தையாகவேகிருஷ்ணன்
பதினெட்டுநாளையிலே விதிகெட்டுபோயிடவே
பக்குவமாசக்கரத்தில் யெங்கில்லாசேனைகளை
பஞ்சுபஞ்சாகசுட்டு வஞ்சகமாபுட்டு
பாரெல்லாந்தர்மருக்கு சீருடன்முடிசூட்டி
பாரதமுடித்துபூமி பாரந்தனைதீர்த்தோன்
பாலபிரகலாதனுக்காய் கோலமாயிரணியனை
பங்கமாகின்றுகொன்று நரசிங்கரூபம்வந்தோன்

இதுவுமது

பயந்தகெஜேந்திரர்க்கு நயந்துமோக்ஷமளித்தோன்
பாணசூரனைவென்றேனே காணுதஅகலிகையை
பாதத்தினலெழுப்பி கோதற்றகௌதமர்க்கு
பாலிக்கவேகொடுத்தோன்
வாலினுயிர்தனைதத்தோன்
பாரிலனுமந்தனுக்கு சாகாவரச்கொடுத்தோன்
பரபிர்பமானரூபன் வரங்கொடுக்கும்பிரதாபன்
பண்ணுக்கோலதனைநம்மால்
எண்ணப்படாதுகண்ணன்
பக்கத்திலேயிருக்க முக்கண்ணனென்னசெய்வார்
பயப்படாயல்உன்வாக்கு நயபபுடனேயுனக்கு
பளிற்சென்று சொல்லுமென்றார்
களிப்புடனே மன்மதனார்.

இரதிசொல் ஒப்பாரி.

ஆதிமுன்னாளையிலே நீதியுடனேநடந்து
அதிசயமானகதை விதிக்குறேன்கேளுநினி
அன்புடனேகேளுமென்று இன்பரதியேயுரைப்பாள்
அயோத்தியையாண்ட மெய்யரரிச்சந்திரன்
அரும்விஸ்வாமித்திரர்க்கும்பெருங்கடன்பட்டதினால்
அயோத்தியைகொடுத்து துய்யகடன்தீராமல்
அவர்மனைவிசந்திரமதி தவபாலன்லோகிதனை
அழைத்துக்கொண்டுகாசிசென்று
தழைத்தபட்டணமேரி

இதுவுமது.

அவர்களிருபேர்களையும் கவனமுடன்விலைகூறி
அந்தணர்க்குவிலையாக்கி நந்தனிடத்தில்யாவரும்
அடிமைதொழில்புரிந்து கடனைகுடுத்துவிட்டார்
அந்தசந்திரமதிமகனும் சிந்தைமகிழ்யவர்பின்னே
அடுத்தவந்தபாவனைபோல் உடுத்தியேயுன்பிறகே

மன்மதன் சொல் ஒப்பாரி.

காலஞர்யீன்றெடுத்த லீலாவினோதருள்ள
கர்ப்பகமானபெண்ணே யற்புதமானமுத்தே
காமவஞ்சியமே கைலாசவாசகமே
கனகவெர்ய்யாரமுள்ள கம்பீரமானவளே
கருத்துக்கிசைந்தவளே சிருத்தயிடமாரதியே
கற்கண்டுசர்க்கரையே பொற்கொடிமாதரசே
கண்ணின்மணியாளே பெண்ணுக்குள்ரத்தினமே
கங்காதரன்தவத்தில் மங்காமலேயுதித்த
கன்னியேபெண்ரதியே உன்னிதமாமயிலே

கணவனுடன்வாது குணமயிலேஉதகாது
காணுமரிச்சந்திரனும் வேணபொருளிழந்தார்
கன்னிசந்திரவதியும் வொண்ணுந்தடுக்கலியே
கவனமாபஞ்சவர்கள் புவனமுழுதுந்தோத்தார்
கார்குழலாள் துரோபதையும்
பார்மீதுதடுக்கலியே

இதுவுமது.

கன்னியரேநீதடுக்க உன்னிதமல்லகுருக்க
காலகாலன்தவசை கோலமுடனேயழித்து
கடிகியேவாரேனடி மடிமீதுனிருக்க
கலங்காமல்நீயிரடி துலங்குமணிமண்டபத்தில்

மதன் சொல் லாவணி.

சாம்பசிவனரின் தவத்திலுதித் தே
சர்க்கரைபாலமுர் தே
வீம்புசெய்யாதே தேம்பியழுகா தே
விடடிவழிமா தே

இரதி சொல் லாவணி.

உன்னையான்பிரிந்து யென்னவென்றிருப்பேன்
வோசைகடலமுர் தே
உனக்குயிதுவிதி யோ
எனக்குயிதுசதி யோ
வுலகாளும்ரஞ்சித மே

மன்மதன் சொல் லாவணி.

உலகில்வாழ்ந்து பலனென்னுபுகழ்ந்து
உம்பரனர்மக னே
தலகஞ்செய்யாதே தடுத்துபே சாதே
காமாக ளஞ் சியமே

இரதிசொல் லாவணி.

கன்னல்வில்லரசே உன்னையான்புரிந்து
கன்னிஞன் தனித்திருக்கேன்
கடிகிப்போனலடியாள் பின்வருவேன்
காரணவஞ்சி... னே

மதன் சொல் லாவணி.

வருவதுநீதியோ அரிவியர்க்கழ கோ
மானே மடமானே
வாதுசெய்யாதே யேதடிமானே
வாரேன்போயினனே

இரதிசொல் லரவணி.

வேதினீர்போனல் யானும்வருவேன்
யின்ணவரமுன்னலே

இதுவுமது.

வில்லெடுக்காதே கொல்லஎண்ணுதே
தொல்லைவரும்போ தே

மதன் சொல் லாவணி.

தொல்லைவந்தாலும் நல்லதென்றெண்ணி
சொல்லையறிந்துவாரே ன்
வொருவர் துரோகஞ்செய்தாலும்
என்திரேகம்போனலும் சொன்னசொல்லைமறவேன்

மதன் சொல் ஒப்பாரி.

மானேமரகதமே தேனேமடமயிலே
மையில்விழியாளே சையோகமானபெண்ணே
மலர்ந்தசெந்தாமரையேமுல்லைமணமுள்ளவளே
மலைநாட்டுசெந்தேனே புலைநாட்டுவிழியாளே

மஸ்தகமேஎன்னுடைய புஸ்தகமேசொல்வதைக்கேள்
மனையாட்டி சொல்வதைகேள்
முனையாட்டி வொருசேதி
மகாநீர்வையமதில் அய்யன்வதமிருக்க
மலர்களையேதொடுத்து திருவம்பலதவமிழந்து
மங்களமாய்வாரேனடி சிங்காரபெண்ரதியே

மதன் சொல் லாவணி.

1. மானேசொல்லுகிறேன் கேளடிதே னே
வானவர் கோனே
அழைத்தால்போவாது நிறஞ்சொன்னேன் (மா)

2. தேனேநீமனங் கலங்காதேயிந்திர
தேவர்சபைக்குள னே
சென்றுவாரேனடிமா னே

3. அலங்கிரதமானே மாளிகைகனி
அன்னமேநீயிருந்து யெனக்குசொல்
லனுப்படிநீயுகந்து

4. மேவும்லீலைகள் மனவெறுத் தே
விவரமாகசொல் லு
நீகற்றசவுதம் வேண்டாம்னில்லு (மானே)

பொது வெண்பா.

அழுது கலங்கிரதி அங்கமது குன்றி
பழுதுவருமென்றுப் பாங்கால்—வழுத்தியுந்
தஞ்சமென்று தேவரெனை சங்கை யுடனழைக்க
வஞ்சமென்று நில்லேனென் பான்

மதன் சொல் லாவணி.

பதறியே தேவர்களது—என்னை
பார்த்துமேயிருப்பார்கள் தொழுது—அடி

பதம் பணிச்சிலையுடனதஞ் செயத்தவமிடைப்
போறேன்—போய்—வாறேன்

இரதி.

போய்வாரே னென்பதும் பொய்யே—பழி
பொல்லாங்கு நேர்வதும்மெய்யே—கெட்ட
பேய்க்குண தேவர்கள் வாய்மொழி யதைநம்பி
போனால்—வினை—நேரும்

மன்மதன்.

பொல்லாங்குநேரு மெனத்தடுத்து—இப்போ
புலம்பாதே யெந்தனைப்பிடித்து—அடி
அல்லல்படச் சிவன்வல்லத் தவமதனை
அழிப்பேன்—பழி—யொழிப்பேன்

இரதி.

வல்லவன் தவமழித்து—இங்கு
வருவேனென் றுமே பழித்து—நீர்
வல்லவ னென்றாலே சொல்லுவானுந்தனை
வண்ணா—மணிக்—கண்ணா

மன்மதன்.

சொல்லுவானென் றுமே அழுது—வல்ல
குமரனைத்தடுக்காதே தொழுது—அடி
எல்லவரும் போற்ற வல்லவனென் றுமே
வருவேன்—முத்தம்—தருவேன்.

இரதி.

முத்தந்தருவேனென் று முகிலே—நீர்
மொழிவதுநீதியாமோ அகிலே—ஐயா
அத்தன்செய்தவமது முத்திவழியென்றே
அறியும்—என்றால்—குறிம்பு

மன்மதன்.

முத்திவழியென்று மொழிந்தாய்—நல்ல
முனிவர்கள்படுந்துயரொழித்தாய்—அடி
கத்தியேயழுகாதே புத்திமயங்குதே
கனியே—யெந்த—னணியே

இரதி.

கலங்கிதவிக்காதே மாரா—மனங்
கட்டுபடச்செய்யும்வீரா—தேவர்
நலங்கெடவுந்தனை கலகங்கள்செய்வார்
நாதா—பெரும்—வாதே

மன்மதன்.

கலகங்கள்செய்தாலும் ரதியே—தவங்
கண்டுமேவருவேன் மதியே—அடி
உலகினிலெணவிட பலமுளமாந்தர்கள்
உண்டா—கரு—வண்டே

இரதி.

பலமுள்ளமாந்தர்களுண்டு—வும்மை
பார்த்துமே தேவர்களண்டி—விட்ட
குலத்தைக்கவந்த நலமிலாவோலையை
தள்ளு—மனம்—விள்ளும்

இரதி சொல்லல்.

செங்கண்மால்பெற்றெடுத்த பொங்கமுள்ள அங்குஜ
செப்புவதைக்கேளுமினி தப்பிதங்கள்நேராது [னே
ஜகமுழுதும்மானிடர்கள் அகமகிழ்ந்து அரனென்று
சரணடைந்துதானிருக்க பரனருளையறியாமல்
சேதிவந்ததென்றுசொல்லி வாதிப்பதுநீதியல்ல

ஜடமதுகடைத்தேற இடம்பொருளேவல்வகை
சாஸ்திரங்கள்பாராமல் நாஸ்திகர்போலெண்ணுதே
சதகோடிராட்சதரும் மதமானராவணனும்
சண்டையில் மாண்டாரெனும்
பண்டைபெரியோர் மொழியை
சற்றுமேபாராமல் குற்றமதைக்காணுமல்
சத்தியுடனன்தகப்பன் பத்தியாய்செய்தவசை
சாடுவேனென்றுசொன்னீர் நாடுநகரஞ்சிறிக்க
சாம்பலாய் போய்விடுவீர் பாம்புகணைமன்மதனே
சகமெச்சவாழ்வோமென்ருள் யிகபரங்காண்ரதியாள்

மன்மதன் சொல் ஒப்பாரி.

அரிமாயனீன்றெடுத்த பரிபாலஅங்குஜர்க்கு
அண்டர்சபைக்கேக ஆபரணமெல்லாமணிந்து
ஆயுதங்களேயெடுத்து ஆரடாதேவவசந்தா
அழகுகிளிவாகனத்தை அதிசயமாசோடித்து
அரைநொடியில்வாவெனவே அப்பவேதேவவசந்தன்
அடிசட்டுபொன்னுலே அச்சதட்டுமுத்தாலே
ஆடுமகரக்கொடியை அதிலிறக்கிகட்டி
அனேகவிதமாய்ரதத்தை அலங்கரித்துஅங்குஜனும்
அரிக்கையிடமன்மதனும். அணிபொன்தேர்மேல்
அமரிக்கையாயேரி அரிவையர்படைசூழ
அன்னரதியைப்பார்த்து அமுர்தபசுங்கிளியே
அமரஞ்சிபொக்கிஷமே அமரரிடம்போயினுலும்
அரைநொடியில்வாரன்டி யஞ்சாதபெண்ணேயென்று
அனேகபுத்திமதிகள்சொல்லி அண்டங்கிடுகிடென்ன
அலேகடலும்மலங்க அகிலமெங்குங்குலுங்க
அவசரமாபோகலுற்ருர் அரிதிருமால்தன்மகனும்



மன்மதன் வழியில் காணும் சகுனம்.

கன்னிரதியாளைவிட்டு உன்னிதமாமன்மதனும்
காரியமாய்தேரேரி வீரியமாபோகையிலே
காகங்கற்றிடவே நாகங்கள்சீரிடவே
சரும்பூனை குரிக்கிடவே பெரும்பன்றிஓடிடலே
பாட்டானைகத்திடவே கோட்டானடித்திடவே
கம்மாளநேர்வரவே சும்மாவண்ணாழவே
கரடிபுலிவேங்கையழ குருடிதடமாடிவிழ
கட்டில்நாக்காலிகளை மொட்டைபாப்பானெடுத்து
கதரிபதரிவிழ எதிரிலாங்கைதகுயர
கருத்தபுடவைகட்டி வருத்தமுடனேவொருத்தி
கையறைந்துபூமியிலே மெய்மறந்துவோலமிட

கண்ணைகலங்கிவர எண்ணைகுடமொடை ய
கீருவாடுகெட்டுவர முறைபாடுபெட்டுவி ழ
கருங்குருவியும்பதர பெரும்பானையுமுருள
காணுதசகுணமெல்லா தோணவேபார்த்துமதன்
கண்ணேகலங்கியப்பேர
யெண்ணுதயெண்ணமெல்லாம்
கருத்திலேதான்நினைத்து
வருத்தமுடனேயிந்திரனும்
கனகசபைதனிலேவந்து
விசனமுடனேதுசொல்வார்

மன்மதன் தேவேந்திரனுக்கு சொல் ஒப்பாரி.

மன்னுயெனையழைத்த தென்னுவென்யிந்திரன்
மாரனேகேளுமுப காரனேஎன்வார்த்தை
மாமனாரந்திவண்ணன் சோமசுந்திரன்திருநேத்திரன்
மகாநிர்வையமதில் ஜெகநாதன்தவமிருக்க
மயங்கியிந்திரலோகம் தயங்கியனல்பத்திதென்று
மாதவனார்தவசை யேதென்றுசொல்வோமையா
மனங்குலேந்துதேவாயாங்கள்
கனங்குலேந்துநின்றோமையா
மங்கைரதிவாளா செங்கரும்புவில்வோனே
வானவாதனனிடுக்கும சேனநாள்பாதையய்யா
மாதவனுரின்றமன்னுயேதொன்றும்நினையாதகண்ணு
மதிவதனகெம்பீரா
உனைகெதியென்று நம்பியேதாமழைத்தோம்
மங்கவேநீறழித்து சிங்காரபடையுடனே
மங்களமாவாருமையா செங்கரும்புவில்லோனே

நந்திதேவனுக்கும் மன்மதனுக்கும் தர்க்கம்.

நந்திதேவன் சொல்லல்,

பச்சைநிறமுடனே வுச்சிதமாய்தேரேரி
பரமன்கைலையருகே அறியாமல்போறதற்கு
பயமிலாவந்ததனார் நலமுடன்செப்பிவிட்டு
பந்தனமாயோடுமென்று நந்தியுமுரைக்கலுற்றார்

மன்மதன் சொல்லல்.

நந்தியுரைக்கேட்டு விந்தையுடனங்கஜனும்
நறுமலர் கணையெடுக்கும்
பெருமையுள்ள மாரனென்று
நானிலமறிந்திருக்க வீணிலேவழிமறித்து
நடக்காதே யென்றுசொன்னீர்
திடமுடன் கொல்வனென்றான்

பலபேர்பாடிய ஒப்பாரி
முற்றிற்று.

ஈஸ்வரன்மேல் மதன் கணைதொடுக்குதல்.

மாகாநிர்வையமதில் அய்யனை தவமிருக்க
மலர்க்கணையே யெடுத்து
மதனுலக மெல்லாந்தத்தளிக்க
மண்டியிட்டு தானெழுந்தார்
அண்டர்கோன் சொல்கேட்டு
மாபதியின் தவசருகே பூமாரன்வந்துநிற்க்
மனங்கலங்கி தவமழிக்ககுணம்
கொண்டு நிற்கையிலே
மகுத்துவநந்தீஸ்வரர் வகுத்தபுத்திகேளாமல்
மலர்க்கணையையேவினதா லுலகநாதன்கடுகடுத்து
மட்டுபடா நெத்திகண்ணை
அவர்திட்டமுடன் தான்திறந்தார்

மங்கைரதிமணவாளன் அங்கனமேபஸ்பமானார்
மாதர்படைகலகலத்து யேதுநாம்செய்வோமென்று
மாதர்களனைவோருமா வேதனைக்குள்ளாகி
மங்கையேசெங்கமலம் யெங்கையடிமன்மதனார்
மாயமாய்போனாரடி நேயசிவன்கண்ணாலே
மன்மதசிகாமணியை யின்னிலத்தில்சோரவிட்டோம்
மங்கைரதிதான் கேட்டால்
அங்கம் பதறிடுவாள்
மன்மதரை தான்பிரிந்து சென்மம்தரித்திருக்காள்
மாதரசேவாருமடி வோதுவோம்ரதிதனக்கு
மார்க்கமாய்போகலுற்றார் ஆரோக்கியமாபுரமே.

தாதிக்குச் சொல் ஒப்பாரி.

என்ஜோட்டுப்பெண்களா யிளவாழைத்தண்டுகளா
காமவள்ளிகாரணத்தை கடுகவுரைப்போமென்று
காடுவனங்கடந்து கானகத்தடாகம்விட்டு
கதிர்சிறந்தபூமிவிட்டு கன்னிரதிவீற்றிருக்கும்
காவடிமாளுசாவடியில் கைகட்டிவாய்பொத்தி
கன்னியர்கள் நின்றார்கள்
கன்னிரதிதான்பார்த்து கனமாகயேதுசொல்வாள்
கண்ணேயென்மன்மத சீராணத்தைசொல்லுமடி
காமவள்ளிவீமவள்ளி கட்டழகுதாதிகளா
காமனெரிந்தாரா கண்டீராபெண்டுகளா
கடுகவுரையுமென்று கன்னிரதிகேழ்க்கயிலே
கட்டழகுதாதிகளும் காமனார்சேதிசொல்ல
கலங்குதம்மா ளெங்கள்மனம்
கபாலமலைதனில்நின்று கடவுள் தவம்புரிவேதான்
காமனும்தானெனவே கரும்புசிலைவளைத்து
கருவண்டால் ஞாணிதொட்டடித்தாரம்மா

கடவுளருங்கோபமதாய் கருதிதணித்தாரம்மா
கைலாசபதி முன்பாக
கண்டுவந்தோ மென்றுரைத்தார்
காதலிமார் பெண்டுகளும்
கன்னிரதிதேவியரும் காதினுல்தான்கேட்டு
கலங்கியேகீழ்விழுந்து கன்னிரதியேதுசொல்வாள்.

இரதி கனவுகண்டு சொல் ஒப்பாரி.

கல்லிழைத்தபஞ்சவர்ண கனககசபாமண்டபத்தி ல்
கன்முத்து ஆலமெத்தை கட்டிலின்மேல்படுத் து
கன்னிரதிதேவியரும் கனவுகண்டுமெய்மறந் து
கடுகவெழுந்திருந்து கண்ணீர்சொரிந்திடவு ம்
கருங்கூந்தலைவிரித்து கைரெண்டையும்நெரித் து
கலங்கியேகீழ்விழுந்து கதரியேதுரைப்பா ள்
கார்த்திருக்கும்தாதிகளா கங்காதரனிடத்தி ல்
காமனும்போயினின்று கணையேதொடுத்திடவு ம்
கண்டபரனுக்கு கடுங்கோபம்வந்திடவு ம்
கண்ணைதிறந்திடவும்கனலாயெரிந்திடவு ம்
கம்மனுட்டிகள்கூடி கடுகவெனையழைத் து
கங்கைகரையோரம்போய் கழுத்திலணிந்திருக்கு ம்
கனகமணிதாலிதனை கத்தியாலேயறுத் து
காராம்பசும்பாலில் காணவித்துபோட்டிடவு ம்
கைவளையலத்தனையுங் கல்லின்மேல்நெரித்திடவு ம்
கரதோலைகரிபணியுங் கழட்டியெரிந்திடவு ம்
கரையில்லாவெண்புடவை கட்டியெனைதழு வ
கதறியழுதிடவும் கண்டோர்சிரித்திடவு ம்
கன்னிபழித்திடவும் கனங்குறைந்துவாடிடவு ம்
காணுசகுனமெல்லாம் கண்டனடியிப்பொழு து

காலமெல்லாமென்னை காப்பாற்றுவாரென் று
கருத்திலெண்ணி யிருந்தே ன்
கருத்தை யழித்துவிட் டு
கனலாயெரிந்துசுட்டு கைசேரவிட்டார டி
காமகளைகள்தீர கட்டிலின்மேல்படுத் து
கும்பஸ்தனத்தை கையிலேபிடித் து
மனுமுதல்நூல்முழுதுங் கண்டுலீலைசெய்பவரா ர்
கட்டியணைப்பவரார் கணிமுத்தஞ்செய்பவரா ர்
கண்ணீர் துடைப்பவரா ர்
கார்க்கசொந்த முள்ளவரா ர்
காதாலேகேழ்ப்பவரார் கண்டுபசுப்பவரா ர்
காமன்தீயாலெரிந்து கணவனையுந்தான்பிரிந் து
காருலகில்யிருந்து கண்டபலனைபிரிந் து
காயம்வைத்து யிருக்கேனென்று ள்
கனகமணி பெண்ரதியா ள்

இரதி சொல் லாவணி.

அன்னமே என்மனம் இருகுதென்னடி
தாதி அடி தாதி ஆவ
ராசையானமதன் மோசம்போனாரடி
தாதி அடி தாதி

தாதி சொல் லாவணி.

மோசமில்லையம்மா தாதிசொல்லுமொழி.
கேளாய் மொழிகேளாய் அவர்
ஆசையானமதன் நேசமாக
வருவாரே வருவா ரே

இரதி சொல் ஒப்பாரி.

வருவார் வருவாரென்று
திறமையுடன் சொல்லவந்தாய்

என்னை மருகியணைந்தவர்தான்
புரியவந்த காரணத்தால்
மடிப்புவந்துநேர்ந்ததடி கொடிபழன்மதற்கு
மாயமோஎன்சுவாமி நியாயமோபூமானே

இரதி சொல் லாவணி.

மாயப்பனென்னுயிரை காயப்பசெந்தணலை
மூட்டி அடி மூட்டி
எந்தன்மாயன்மெற்றமதன் நேயகா
வரக்காணேன் வரக்காணேன்

தாதி சொல் லாவணி.

அப்ாயமென்னம்மா வுபாயமாக
வருவாரே வருவாரே அவர்
தீயில்முழுவாரென்று தினமும்புலம்பவேண்டாம்
தாயே அடி தாயே

இரதி சொல் ஒப்பாரி.

விலம்பாதபுலம்பாதயென்று சிலம்சியடிசெங்கலம்
என்புத்திக்கிசைந்தவரை நித்திரையில்நான்மறவேன்
பொருகு நீலவெம்புதடி வுருகுதடிகாமவெள்ளம்

இரதி சொல் லாவணி.

பிறந்தபோதிலென்னை வருந்திமாலையிட்ட
காமா ஒய் காமா
இறந்தபோதுனிருந்து யென்னசெய்வேன்
காமா ஒய் காமா

தாதி சொல் லாவணி.

இறந்துபோனாரென்று திறந்துசொல்லவேண்டாம்
தாயே அடி தாயே
அந்த அரனார் தவமழித்து அருகினில்
வருவாரே வருவாரே

இரதி சொல் லாவணி.

அரனார்தவமழித்து அருகினில்வருவாரென்று
பருவமொழி சொல்லவந்தீர்
அரன்பக்கம்போனமைந்தர் திரும்பிவரபோரதில்லை
அறிவுள்ளசெங்கமலம் நிரணியமாய்க்கேளுமடி

இரதி சொல் லாவணி.

அன்னமானே கிளிதன்னைகொண்டுவாடி
தாதி அடி தாதி
எந்தன்சொர்னமானே மதனன் தன்னைகண்டுகூட்டி
வாரேன் கூட்டி வாரேன்

தாதி சொல் லாவணி.

கூட்டிவாரேனென்று மேட்டிமையை
சொல்லலாமோ சொல்லலாமோ
மாட்டிலேருமீசன் காட்டிலோட்டிபோனான்
தாயே அடி தாயே

இரதி சொல் ஒப்பாரி

மாட்டிலேருமீசன் காட்டிலோட்டிபோனானென்று
வாட்டமது சொல்லவந்தாய்
கஞ்சாவெரியினால் அஞ்சாதேமன்மதரை
கரிகியெரித்தானா முடிகியசெங்கமலம்

இரதி சொல் லாவணி.

கையுஞ்சோருதடி மெய்யுஞ்சோருதடி
தாதி அடி தாதி
மையல்தீர்க்குமதன் நேசமாகவரக்
காணேன் வரக் காணேன்

தாதி சொல் லாவணி.

வரக்காணே மென்றுசொல்லி
வருந்திபுலம்பவேண்டாம்
தாயே அடி தாயே.
பரமசிவன்தவசை திறமையுடனழித்து
வருவாரே வருவாரே

இரதி சொல் புலம்பல் ஒப்பாரி.

ஆடிதாதிகளா ஆரணங்கேசொல்லுறேன்கேள்
செங்கமலதாதிகளா சேதிவந்துகேளுங்கடி
ஆரியடிவீரியடி ஆபரணசோலையடி
முத்துமுதலையடி மோகனப்பெண்மயிலே
சித்திவிர்த்தினக்குயிலே சிங்காரவன்னங்களே
சீறல்பெருத்தயெந்தன் தேசிகரனுரென்கணவன்
அப்போதுஈஸ்வரனுர் ஆருய்ந்துபாராமல்
நெத்தியின்கண்திரந்து நேராகப்பார்த்திடவே
ஆணழகரென்கணவன் அனலாயெரிந்தாரடி
என்றைக்குகாண்பனடி யென்சோட்டுதாதிகளா
காலைக்கடுக்குதிப்போ கணுக்கால்கழலுதடி
சுருள்முப்பத்துமுக்கோடி முனிவர்களும்தேவர்களும்
நாற்பத்தியெண்ணுயிரம் ரிஷிகளுந்தபோதனரும்
இத்தனைபேர்பார்த்திருக்க யெக்கியமாய்வளர்த்தி
முன்னூறுபார்ப்பார்கள் முகூர்த்தமிட்டமங்கிலியம்

ஐன்னூறுபிராமணர்கள் அள்ளியிட்டமங்கிலியம்
தொன்னூறுபிராமணர்கள்தொட்டுவிட்டமங்கிலியம்
வசிஷ்டரும்நாரதரும் வாங்கியிட்டமங்கிலியம்
மகுடமன்னர்கள்வந்து மன்னவனை தான்பார்க்க
பட்டைகழட்டுங்கடி பழந்துணியை தாங்களடி
சேலையவுருங்கடி சித்தாடை தாங்களடி
செந்தழும்சந்தனமும் கைதனிலேபூசுங்கடி
மஞ்சளரையுங்கடி மார் மீதில்சாற்றுங்கடி
பாப்பானைகூப்பிடுங்கள் பால்சடங்குசெய்யுங்டி
ஐயரைகூப்பிடுங்கள் அன்னரதிபெண்ணுக்கு
அருங்கழுத்துநூல்வாங்க அல்லவரும்வாங்களடி
அளரிபிரண்டழுதாள் அன்னரதிதேவியரும்

இதுவும் ரதி புலம்பல்.

ஏன்பத்தாயிறந்தபோது பாங்கிகளாதோழிகாள்
எனக்கொத்தாசை யாருமில்லை
பாலுங்கசக்குதடி பழமும்துவக்குதடி
பாக்குவெத்திலை தோண்பதில்லை
தூக்கம்மெத்த வருவதில்லை

பத்தாவைபோல்வந்து பதியைகுலைக்குதடி
பட்டுரவிக்கையது விட்டுதெரிக்குதடி
பட்டை அவருங்கடி பழந்துண்டைதாருங்கடி
என்சரிகைஅவருங்கடி என்சஞ்சலத்தைதீருங்கடி
என்தாலியைதான்வாங்க தாகனைகூப்பிடுங்கள்
என்மங்கிலியுந்தான்வாங்க லிங்கரையேகூப்பிடுங்கள்
நான்பாவிபெண்பிறந்த அதிசயத்தைக்கேளுங்கடி

தங்கப்பெண் லாவணி.

1. ஆசைக்கழுதாலும் ஆகாதுஎன்தாதி
அவர் அழகை நினைந்துகொண்டால்
என் தாதிகளா அங்கம்பதருதடி

2. மோசஞ்செய்தான னை
மூடிகழுத்தறுத் து
வாசவன்போனநாளா என்தாதிக ளா
மனதுகலங்குத டி

3. அன்னநடையழகு ம்
அழகுதிருமுகமு ம்
சின்னமொழியழகும் என்தாதிக ளா
தெரிசிப்பதெக்கால மோ

4. சின்னவயதுதன்னி ல்
சேர்ந்து அணையாம ல்
என்மன்னனெரிந்தாரடி என்தாதிக ளா
மதிமோசம் வந்துத டி

5. இப்பார்தன்னிலே யெவருந்துணையில்லை
இப்படிக்குஎன்தலையில் என்தாதிகளா
எழுதினானே பிர்மனும்

அப்பாவுசொன்னது அருமைமொழியென்று
கொப்பனவோடிதேடி என்தாசிகளா
கூப்பிட்டு வாங்களடி

இரதி புலம்பல் ஒப்பாரி.

தனகோட்டிபுண்யகோட்டி கனகாபிஷேகவல் லி
தவநேமிஅபிராமி சிவகாமிதிருகா மி
தனபூஷணிபாஷணி கல்யாணிநாராய ணி
தருகோமளாங்கிசின்னி திரிகோலபூங்குழ லி
சற்குணிமுத்துகிருஷ்ணி பற்குணிவிசாலாட் சி
சரசகலாநித்தியசொலி பரசுமணிவச்சிராங் கி
சந்ரவதனிசிலம்பி சுந்தரவிசாலாட் சி
சாரிபசுந்திரமே சீர்பெற்றமீனாட் சி
தங்கம்ஸ்த்திரி ரங்கஓ செங்கமலாட்சிய ரே
தாங்கிமோகனாங்கியே என்பாங்கிகளாவாங்கள டி
தர்மதுரையென்கணவன் வர்மமாயென்னைவிட் டு
சனியானயிந்திரன்தன் அனியாயஞ்சொல்கேட் டு
சண்டாளஎன்தகப்பன் பண்டாரத்தின்தப சை
தானழிக்கவேபோயி தேனிழந்தாசையைபோ ல்
தத்தளித்துமாண்டாரடி பத்துதடியென்வய று
சகித்திருக்கக்கூடலியே சுகித்திருக்கநாடலே பே
சஞ்சலத்துள்ளானடி நெஞ்சம்தடுமாறுத டி
சதிவந்துநேர்ந்ததடி மதிகெட்டுபோனத டி
சாரமுமிழந்தனடி நீரமுகுலைந்தன டி
சாயமஞ்சள்போச்சுதடி ஞாயமெங்கேசொல்வன டி
தரித்திரமேவந்ததடி வெரிபிடித்துநின்றன டி
தர்மமெங்கேபோச்சுதடி கர்மம்வந்துவாய்த்தத டி
தாலியுமிழந்தனடி ஓலையும்பிரிந்தன டி
தாழ்வாகபோனனடி வாழ்வில்குறைந்தன டி

தரையிலிருக்கனடி அரையில்படுக்கன டி
திணலாயெரியுதடி பிணம்போலேநின்றன டி
வங்கநகைபோச்சுதடி குங்கம்குலேந்தத டி
தண்ணீரிலேவிழுந்து மண்ணுக்குள்ளவிழ்ந் து
சடலத்தைவொழிப்பேநன்று திடுக்கனவேமிரண் டு
சலரிமனம்நொந்து அலரியேகீழ்விழுந் து
தரையிலேகையரைந்து அரையில்பட்டுசரிந் து
தயங்கியழுதுகொண்டு மயங்கியேயேதுரைப்பாள்

இரதி புலம்பல் ஒப்பாரி.

மதுரமுள்ள தாசிகளா அதரங்கொடுத்தமத ன்
மரித்திடவுந் தாலித னை
அருத்திடவும் முண்டையென் று
குரித்திடவுங் கண்டவர்க ள்
சிரித்தவுடமெந்தன் மன ம்
வெரித்திடவுமுன்போ லே
மங்கையர்கள் தாலிதனை யெங்கேபரித்தே னோ
மஞ்சள்குங்கமிட்டவரை கெஞ்சகுலேத்தே னோ
மாலையறுத்தேனோ ஓலேகிழித்தே னோ
மட்தவசிபோகிறன்னே வாய்திட்டிவைதே னோ
வாக்காலடைத்தேனோ தீக்களவுசெய்தே னோ
வண்ணார்க்குநாவிதர்க்கு ம்
பெண்ணார்மறுத்துவைக்கு ம்
வார்த்தியார்பண்டிதருக்கும் சீர்த்தியாய்கூலித னை
வஞ்சனைசெய்தெடுத்து கெஞ்சவடித்தே னோ
வளரும்பயிருக்கு தளரவிடாமல்நீ ர்
வாடச்செய்தே னோ
மாடப்புறுவிரெண்டை ஜோடைக்லேத்தே னோ

மாளவிட்டநதியில் ஸ்நானங்கள்பண்ணினே ளே
மாதாபிதாகுருவை சூதாகவைதே ளே
மடிபசுவின்பாலே துடிப்பாயுதைத்தே ளே
தாழ்வாயென்கணவரிடம் வாதுபுரிந்திட்டே ளே
யேதேதுசெய்தேனோ மணவாளனைப்புரிந் து
நிணம்போலேனின்றனே டி
மதிமயங்கலாச்சுதடி விதியோயென்கர்மம டி
மாயமாய்வந்துதடி காயம்வைத்திருக்கனே டி
மன்னவனுந்தானிறந் து
ஜென்மம்வைத்துயானிருந்தா ல்
மதிப்பாரோபூவுலகில் சதிகாரியானேனென் று
மண்ணில்விழுந்தது கண்ணில்உதிரங்குழைத் து
மாங்குயிலாள்பெண்ரதியும் யேங்கியழுகலுற்ற ள்

பலவித்வான்கள் பாடிய ஒப்பாரி

முற்றிற்று.